Written by Administrator
Thursday, 25 June 2009 07:46 -

□□□□□□□□

23.06.2009

மகளிர் சுய உதவி குழுவினருக்கு பேரிடர் மேலாண்மை பயிற்சி

விழுப்புரம், ஜூன் 23- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு முதலுதவி மற்றும் மீட்பு பணிகள் குறித்த பயிற்சி முகாம் விழுப்புரத்தில் நேற்று நடந்தது.

வருவாய்த்துறை மற்றும் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்ட அமைப்பும் இணைந்து லட்சுமண இருஷ்ணா திருமண நிலையத்தில் நடந்த பயிற்சியை கலெக்டர் ராகேஷ்சந்திரா துவக்கிவைத்தார். விழுப்புரம் பகுதியில் இருந்து பல்வேறு மகளிர் சுய உதவிக் குழுவை சேர்ந்த 2000க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

பயிற்சியில் பங்கேற்ற சுய உதவிக்குழு மகளிருக்கு பேரிடரை எதிர்கொள்ள தயார் நிலை மற்றும் நடவடிக்கை செயல்பாட்டை உருவாக்குதல், பல்வேறு அபாயங்களின் போது முன் னெச்சரிக்கை முறைகள், பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்பு முறைப்படி நடந்து கொள்ளுதல் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது.

தேசிய பேரிடர் மீட்பு பாதுகாப்பு படை மற்றும் செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் ஆகிய அமைப்புகளின் பயிற்சியாளர்கள் பேரிடர் காலங்களில் உதவிகள் மற்றும் மீட்புப்பணிகள் குறித்து செயல் விளக்கமளித்தனர்.

பயிற்சியில் துணை கலெக்டர் விஜயகுமார் பிதுரி, மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட அலுவலர் தெய்வநாயகமணி, விழுப்புரம் வட்டார வளர்ச்சி அதிகாரி சாரதி, தாசில்தார்கள் தமிழ்ச்செல்வன், உதயகுமார், புதுச்சேரி கூட்டுறவு வங்கி சார்ந்த அதிகாரி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.